
Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

வர்தந்தி
சிறப்பு இதழ்

ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் ஸ்ரீசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ விதுசேகரபாரதீ மஹாஸ்வாமிகளின் 32ஆவது வர்தந்தி மஹோா உற்ஸவம்

ஸத் ஸம்பிரதாயம் இதழின் தொடர்ச்சி

(அ) உபநிஷத்தில் கூறியுள்ள ஈசுவர லக்ஷணம் இவரிடம் இருப்பதைக் கூறுகிறார்:-

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

यतः सर्वं जातं वियदनिलमुख्यं जगदिदं स्थितौ निःशेषं योऽवति निजसुखांशेन मधुहा ।
लये सर्वं स्वस्मिन्हरति कलया यस्तु स विभुः शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ २ ॥

யத꞉ ஸர்வம்' ஜாதம்' வியத³னிலமுக்²யம்' ஜக³தி³த³ம்' ஸ்தி²தௌ நி꞉ஶேஷம்' யோ(அ)வதி நிஜஸுகா²ம்'ஶேன மது⁴ஹா .
லயே ஸர்வம்' ஸ்வஸ்மின்ஹரதி கலயா யஸ்து ஸ விபு⁴꞉ ஶரண்யோ லோகேஶோ மம ப⁴த்ரது க்ரு'ஷ்ணோ(அ)க்ஷிவிஷய꞉ .. 2 ..

यतः {யத꞉} = எவரிடமிருந்து; वियदनिलमुख्यं {வியத³னிலமுக்²யம்} = ஆகாசம், வாயு முதலான; इदं {இத³ம்} = இந்த; सर्वं जगत् {ஸர்வம்' ஜக³த்} = எல்லா உலகமும்; जातं {ஜாதம்} = உண்டாகியிருக்கிறதோ; मधुहा {மது⁴ஹா} = மது என்ற அஸுரனைக் கொன்ற; यः {ய꞉} = எந்த ஈசுவர ன்; स्थितौ {ஸ்தி²தௌ} = ஸ்திதி காலத்தில்; निजसुखांशेन {நிஜஸுகா²ம்'ஶேன} = தன் ஆனந்தாம்சத்தால்; निश्शेषं {நிஶ்ஶேஷம்} = எல்லாவற்றையும்; अवति {அவதி} = காப்பாற்றுகிறாரோ; यस्तु {யஸ்து} =

எவரோவெனில்; कलया {கலயா} = தன் அம்சத்தால்; लये {லயே} = பிரளயகாலத்தில்; स्वस्मिन् {ஸ்வஸ்மின்} = தன்னிடத்தில்; सर्वं {ஸர்வம்} = எல்லாவற்றையும்; हरति {ஹரதி} = அடங்கும்படி செய்கிறாரோ; विभुः {விபு⁴:} = வியாபகராயும்; शरण्यः {ஶரண்ய:} = ரக்ஷகராயும்; लोकेशः {லோகேஶ:} = எல்லா உலகங்களுக்கும் ஈசுவரனாயும் இருக்கும்; कृष्णः {க்ரு’ஷ்ண:} = கிருஷ்ணன்; मम {மம} = என்னுடைய; अक्षिविषयः {அக்ஷிவிஷய:} = கண்களுக்கு விஷயமாக; भवतु {ப⁴வது} = ஆகட்டும்.

எவரிடமிருந்து ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், பிருதிவி முதலான பிரபஞ்சம் முழுவதும் உண்டாகிறதோ, ஸச்சிதானந்த ஸ்வரூபமான எவர் தன்னிடமுள்ள ஆனந்தாம்சத்தால் எல்லா பிராணிகளையும் காப்பாற்றுகிறாரோ, பிரளய காலத்தில் தன் அம்சத்தால் எவர் எல்லாவற்றையும் தன்னிடம் ஒடுங்கும்படி செய்கிறாரோ, வியாபகனாயும் ரக்ஷகனாயும் லோகேசனாயுமுள்ள அந்த கிருஷ்ணன் என் கண் எதிரில் தோன்றட்டும். ‘यतो वा इमानि भूतानि जायन्ते, येन जातानि जीवन्ति, यत्प्रयन्त्यभिसंविशन्ति' உபநிஷத்திலும் "என்று ப்ரஹ்மஸூத்ரத்திலும் கூறப்பட்ட ப்ரஹ்ம லக்ஷணம் இங்கு காட்டப்பட்டுள்ளது. ஸச்சிதானந்த ஸ்வரூபமான இவரே தன் ஆனந்தத்தின் ஒரு திவிலையால் எல்லாப் பிராணிகளையும் ஆனந்தமுள்ளவர்களாகச் செய்கிறார். இந்த ஆகாசம் போல் விபுவான பரமாத்மா இல்லாவிட்டால் ஒருவரும் வாழவே முடியாது.

एतस्यैवानन्दस्यान्यानि भूतानि मात्रामुपजीवन्ति । (பிருஹதாரண்யகம் 4-3-32)
को ह्येवान्यात्कः प्राण्यात् । यदेष आकाश आनन्दो न स्यात् । एष ह्येवानन्दयाति । (தைத்ரீயம்)

பகவத் தர்சனத்துக்கு உபாயமான யோக முறையைக் கூறுகிறார்:-

असूनायम्यादौ यमनियममुख्यैः सुकरणैर्निरुद्ध्येदं चित्तं हृदि विलयमानीय सकलम् ।
यमीड्यं पश्यन्ति प्रवरमतयो मायिनमसौ शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ ३ ॥
அஸூனாயம்யாதௌ³ யமநியமமுக்²யை: ஸுகரணைர்நிருத்³த்⁴யேத³ம்’ சித்தம்’ ஹ்ரு’தி³ விலயமானீய ஸகலம் .
யமீட்³யம்’ பஶ்யந்தி ப்ரவரமதயோ மாயினமஸௌ ஶரண்யோ லோகேஶோ மம ப⁴வது க்ரு’ஷ்ணோ(அ)க்ஷிவிஷய: .. 3 ..

आदौ {ஆதௌ³} = முதலில்; असून् {அஸூன்} = பிராணனை; आयम्य {ஆயம்ய} = அடக்கி; यमनियममुख्यैः {யமநியமமுக்²யை:} = யமம், நியமம் முதலான; सुकरणैः {ஸுகரணை:} = சிறந்த ஸாதனங்களால்; इदं {இத³ம்} = இந்த; चित्तं {சித்தம்} = மனதை; हृदि {ஹ்ரு’தி³} = மனதில்; निरुध्य {நிருத்⁴ய} = தடுத்து; सकलम् {ஸகலம்} = எல்லாவற்றையும்; विलयमानीय {விலயமானீய} = மறையும்படி செய்து; प्रवरमतयः {ப்ரவரமதய:} = சிறந்த புத்தியுள்ளவர்கள்; मायिनं {மாயினம்} = மாயாவியான; ईड्यं {ஈட்³யம்} = புகழத்தக்க; यं

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

{யம்} = எவரை; पश्यन्ति {பஶ்யந்தி} = பார்க்கிறார்களோ; असौ {அஸௌ} = ஆகட்டும்; शरण्य: {ஶரண்ய:} = ரக்ஷகராயும்; लोकेश: {லோகேஶ:} = எல்லா உலகங்களுக்கும் ஈசுவரனாயும் இருக்கும்; कृष्ण: {க்ரு’ஷ்ண:} = கிருஷ்ணன்; मम {மம} = என்னுடைய; अक्षिविषयः {அக்ஷிவிஷய:} = கண்களுக்கு விஷயமாக; भवतु {ப4வது} = ஆகட்டும்.

உலகில் சிறந்த புத்திசாலிகள் மிகுந்த சிரமப்பட்டு யமம், நியமம் முதலிய உபாயங்களால் புலன்களையும் மனதையும், பிராணாயாமத்தால் பிராணனையும் அடக்கி, மனத்தை வெளியில் போகவொட்டாமல் ஹிருதயத்திலேயே நிலைநிறுத்தி, மனதில் விஷயம் ஒன்றும் தோன்றாதவாறு விருத்திநிரோதம் செய்து, ஈசுவரனைப் பார்க்கிறார்கள். இவ்வித சிரமம் ஒன்றுமில்லாமலே தங்களைச் சரணமடைந்த எனக்குத் தாங்கள் கருணையால் தங்கள் ஸ்வரூபத்தை எனக்குக் காட்டவேண்டும். (3)

பிருஹதாரண்யகத்தில் உள்ள அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் கூறியுள்ளபடி ஈசுவர ஸ்வரூபத்தை வர்ணிக்கிறார்:-

पृथिव्यां तिष्ठन्यो यमयति महीं वेद न धरा यमित्यादौ वेदो वदति जगतामीशममलम् ।
नियन्तारं ध्येयं मुनिसुरनृणां मोक्षदमसौ शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ ४ ॥
ப்ரு’தி2வ்யாம்’ திஷ்ட2ன்யோ யமயதி மஹீம்’ வேத3 ந த4ரா யமித்யாதௌ3 வேதோ3 வத3தி ஜக3தாமீஶமமலம் .
நியந்தாரம்’ த்4யேயம்’ முநிஸுரந்ரு’ணாம்’ மோக்ஷத3மஸௌ ஶரண்யோ லோகேஶோ மம ப4வது க்ரு’ஷ்ணோ(அ)க்ஷிவிஷய: .. 4 ..

य: {ய:} = எவர்; पृथिव्यां {ப்ரு’தி2வ்யாம்} = பூமியில்; तिष्ठन् {திஷ்ட2ன்} = இருந்துகொண்டு; महीं {மஹீம்} = பூமியை; यमयति {யமயதி} = அடக்கி ஆள்கிறாரோ; धरा {த4ரா} = பூமி; यं {யம்} = எவரை; न वेद {ந வேத3} = அறியமாட்டாளோ; इत्यादौ {இத்யாதௌ3} = இது முதலான இடத்தில்; वेद: {வேத3:} = வேதம்; जगतां ईशं {ஜக3தாம்’

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஈஶம்} = உலகங்களுக்கு நாயகனாகவும்; अमलं {அமலம்} = தோஷங்களற்றவராகவும்; नियन्तारं {நியந்தாரம்} = அடக்குபவராகவும்; ध्येयं {த்⁴யேயம்} = தியானம் செய்யத் தகுந்தவராகவும்; मुनिसुरनृणां {முநிஸுரந்ரு’ணாம்} = முனிவர், தேவர், மனிதர் இவர்களுக்கு; मोक्षदं {மோக்ஷத³ம்} = முக்தியைத் தருபவராகவும்; वदति {வத³தி} = (எவரை) சொல்கிறதோ; असौ {அஸௌ} = அந்த; शरण्यः {ஶரண்ய:} = ரக்ஷகராயும்; लोकेशः {லோகேஶ:} = எல்லா உலகங்களுக்கும் ஈசுவரனாயும் இருக்கும்; कृष्णः {க்ரு’ஷ்ண:} = கிருஷ்ணன்; मम {மம} = என்னுடைய; अक्षिविषयः {அக்ஷிவிஷய:} = கண்களுக்கு விஷயமாக; भवतु {ப⁴வது} = ஆகட்டும்.

பிருஹதாரண்யக உபநிஷத்தில் அந்தர்யாமி ப்ராஹ்ணத்தில், ஜனகருடைய ஸபையில் உத்தாலகர் யாக்ஞவல்க்யரிடம் "அந்தர்யாமியைப்பற்றி விபரமாகச் சொல்லுங்கள்" என்று கேட்கவே யாக்ஞவல்க்யர் விஸ்தாரமாக பதில் கூறுகிறார் - (अन्तर्यामिणं ब्रूहीति यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरो यं पृथिवी न वेद यस्य पृथिवी शरीरं यः पृथिवीमन्तरो यमयति एन्त त आत्माऽन्तर्याम्यमृतः) -பிருஹதாரண்யகம் அத். 3 ப்ரா. 7

"எவர் பூமிக்கு உள்ளே இருக்கிறாரோ, எவரை பூமி அறியமாட்டாளோ, எவருக்கு பூமியே சரீரமோ, எவர் உள்ளே இருந்துகொண்டு பூமியை அடக்கி ஆள்கிறாரோ, இவர் தான் அந்தர்யாமி. நாசரஹிதர் இவரே உன்னுடைய ஆத்மா. இதுபோலவே மற்ற நான்கு பூதங்கள், ஸூரியசந்திரர்கள், நக்ஷத்ரங்கள், சரீரம், இந்திரியங்கள், மனம் இதுமுதலான எல்லா இடங்களிலும் எல்லா பிராணிகளிடமும் அவைகளுக்குத் தெரியாமல் உள்ளே இருந்துகொண்டு அவைகளை நன்கு தெரிந்து கொள்கிறவர். அவைகளையே சரீரமாகக் கொண்டவர், தனியாக வேறு சரீரமற்றவர், அதனாலேயே நாசமற்றவர். எல்லா வெற்றையும் அடக்கியாள்பவர். இவர் தான் அந்தர்யாமி. இவரே எல்லோருக்கும் ஆத்மாவாக" விளங்குகிறார். இவ்வாறு உபநிஷத்தில் கூறப்பட்டுள்ள அந்தர்யாமி தான் கிருஷ்ணன். அவரே தியானம் செய்யத் தக்கவர். ஸாத்விக ஸ்வபாவர்களான முனிவர்கள், தேவர்கள், மனிதர்கள் இவர்களுக்கு மோக்ஷத்தை அளிப்பவர். இந்த கிருஷ்ணன் என் கண் எதிரே வந்து நிற்கட்டும். (4)

கேனோபநிஷத்தில் கூறியபடி ஈசுவரனுடைய ஸ்வரூபத்தை வர்ணிக்கிறார்:-

महेन्द्रादिर्देवो जयति दितिजान्यस्य बलतो न कस्य स्वातन्त्र्यं क्वचिदपि कृतौ यत्कृतिमृते ।
बलारातेर्गर्वं परिहरति योऽसौ विजयिनः शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ ५ ॥
மஹேந்த்³ராதி³ர்தே³வோ ஜயதி தி³திஜான்யஸ்ய ப³லதோ ந கஸ்ய ஸ்வாதந்த்ர்யம்’
க்வசித³பி க்ரு’தௌ யத்க்ரு’திம்ரு’தே .
ப³லாராதேர்க³ர்வம்’ பரிஹரதி யோ(அ)ஸௌ விஜயின: ஶரண்யோ லோகேஶோ மம
ப⁴வது க்ரு’ஷ்ணோ(அ)க்ஷிவிஷய: .. 5 ..

यस्य {யஸ்ய} = எவருடைய; बलतः {ப³லத:} = பலத்தால்; महेन्द्रादिः {மஹேந்த்³ராதி³:} = இந்திரன் முதலான; देवः {தே³வ:} = தேவர்; दितिजान् {தி³திஜான்} = அஸுரர்களை; जयति {ஜயதி} = ஜயிக்கிறாரோ; यत्कृतिमृते {யத்க்ரு'திம்ரு'தே} = எவருடைய பிரயத்னமில்லாமல்; कस्य {கஸ்ய} = எவருக்கும்; क्वचिदपि कृतौ {க்வசித³பி க்ரு'தௌ} = ஒரு காரியத்திலும்; स्वातन्त्र्यं {ஸ்வாதந்த்ர்யம்} = ஸ்வாதந்த்ரியம்; न {ந} = இல்லையோ; यः {ய:} = எவர்; विजयिनः {விஜயின:} = ஜய சீலரான; बलारातेः {ப³லாராதே:} = பலாஸுரனுக்கு சத்ருவான இந்திரனின்; गर्वं {க³ர்வம்} = அஹங்காரத்தை; परिहरति {பரிஹரதி} = போக்குகிறாரோ; असौ {அஸௌ} = அந்த; शरण्यः {ஶரண்ய:} = ரக்ஷகராயும்; लोकेशः {லோகேஶ:} = எல்லா உலகங்களுக்கும் ஈசுவரனாயும் இருக்கும்; कृष्णः {க்ரு'ஷ்ண:} = கிருஷ்ணன்; मम {மம} = என்னுடைய; अक्षिविषयः {அக்ஷிவிஷய:} = கண்களுக்கு விஷயமாக; भवतु {ப⁴வது} = ஆகட்டும்.

தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் நடைபெற்ற யுத்தத்தில் ஒரு சமயம் தேவர்களுக்கு ஜயம் ஏற்பட்டது. தேவர்கள் ஜயித்தது தம் சொந்த பலத்தால் அல்ல; ஈசுவர பலத்தால் தான். உலகில் ஒருவருக்கும் ஸ்வாதந்திரியம் கிடையாது. ஈசனது ஸங்கல்பத்தாலும் அருளாலும் தான் உலகில் எல்லாக் காரியமும் நடைபெறுகிறது. அவரது அருள் இல்லாவிட்டால் ஒருவரும் ஒரு காரியத்தையும் செய்யமுடியாது. இது தெரியாமல் ஈசனை மறந்து தம் தம் சொந்த பலத்தாலேயே அஸுரர்களை ஜயித்ததாக தேவர்கள் கர்வம் கொண்டனர். ஸாத்விகர்களும் தம் பக்தர்களுமான இந்திரன் முதலிய தேவர்களின் செருக்கைப் போக்க ஈசுவரன் அவர்களின் முன்னால் ஒளி வடிவமாகத் தோன்றினார். அதைக்கண்டு தேவர்கள் பயம் அடைந்தனர். இந்திரன் முதலில் அக்னியையும் பின்னர் வாயுவையும் அனுப்பினான். அவர் முன்னால் அக்னி ஒரு துரும்பைக் கூட கொளுத்த முடியவில்லை. வாயு ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை வெட்கமடைந்து கர்வம் நீங்கி அவ்விருவரும் திரும்பி வந்தனர். இந்திரன் அருகில் செல்லவே அவர் மறைந்துவிட்டார். அவரைப் பார்க்கவே முடியவில்லை. பின்னர் எல்லோரும் கர்வம் நீங்கியவர்களாய் ப்ரஹ்ம வித்யா ஸ்வரூபிணியான ஹைமவதி உமாதேவியினருளால் ஈசுவர ஸ்வரூபத்தை அறிந்து கொண்டார்கள். தேவர்கள் முன்தோன்றி கர்வத்தைப் போக்கிய அந்த கிருஷ்ணன் என் கண்ணுக்கு விஷயமாகி அருள்செய்யட்டும். (5)

विना यस्य ध्यानं व्रजति पशुतां सूकरमुखां विना यस्य ज्ञानं जनिमृतिभयं याति जनता ।
विना यस्य स्मृत्या कृमिशतजनि याति स विभुः शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ।। ६ ।।

வினா யஸ்ய த்⁴யானம்' வ்ரஜதி பஶுதாம்' ஸூகரமுகா²ம்' வினா யஸ்ய ஜ்ஞானம்' ஜனிம்ரு'திப⁴யம்' யாதி ஜனதா .

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

வினா யஸ்ய ஸ்ம்ரு’த்யா க்ரு’மிஶதஜனி யாதி ஸ விபு⁴: ஶரண்யோ லோகேஶோ மம
ப⁴வது க்ரு’ஷ்ணோ(அ)க்ஷிவிஷய: .. 6 ..

यस्य {யஸ்ய} = எவருடைய; ध्यानं विना {த்⁴யானம்’ வினா} = தியானம் இல்லாவிடில்; सूकरमुखां {ஸூகரமுகா²ம்} = பன்றி முதலான; पशुतां {பஶுதாம்} = மிருகப் பிறவியை; व्रजति {வ்ரஜதி} = அடைகிறானோ; यस्य {யஸ்ய} = எவருடைய; ज्ञानं विना {ஜ்ஞானம்’ வினா} = அறிவு இல்லாவிடில்; जनता {ஜனதா} = ஜநஸமூஹம்; जनिमृतिभयं {ஜனிம்ரு’திப⁴யம்} = -பிறப்பு, சாவு இவற்றால் பயத்தை; याति {யாதி} = அடைகிறதோ; यस्य {யஸ்ய} = எவருடைய; स्मृत्या विना {ஸ்ம்ரு’த்யா வினா} = ஸ்மரணம் இல்லாவிடில்; कृमिशतजनि {க்ரு’மிஶதஜனி} = நூற்றுக் கணக்கான புழுக்களின் பிறவியை; याति {யாதி} = அடைகிறானோ; स: {ஸ:} = அந்த; विभु: {விபு⁴:} = வியாபகனாயும்; शरण्य: {ஶரண்ய:} = ரக்ஷகராயும்; लोकेश: {லோகேஶ:} = எல்லா உலகங்களுக்கும் ஈசுவரனாயும் இருக்கும்; कृष्ण: {க்ரு’ஷ்ண:} = கிருஷ்ணன்; मम {மம} = என்னுடைய; अक्षिविषयः {அக்ஷிவிஷய:} = கண்களுக்கு விஷயமாக; भवतु {ப⁴வது} = ஆகட்டும்.

மனிதனாகப் பிறந்தவன் மறுபடியும் மனிதப் பிறவியையோ அல்லது உயர்ந்த பிறவியையோ, அல்லது மோக்ஷத்தையோ அடையவேண்டுமானால் பகவானை ஸ்மரிக்க வேண்டும். அவரை தியானம் செய்யவேண்டும். அவரது ஸ்வரூபத்தை அறிந்து கொள்ள வேண்டும். உத்தம ஜன்மாவையடைந்தும் பகவத் ஸ்மரணத்தையும் தியானத்தையும் செய்யாமல் அவரை அறிந்துகொள்ளாமல் ஆயுளைக் கழிப்பவர்கள் மறுபடியும் மனிதனாகப் பிறப்பதில்லை. பன்றி முதலான மிருகமாகவோ, புழுக்களாகவோ பிறந்து ஜனன மரண ஸாகரத்தில் பயத்துடன் துன்புறுகிறார்கள். ஹே கிருஷ்ணா, நான் உன்னை ஸ்மரிக்கிறேன். எனக்கு உன் ஸ்வரூபத்தைக் காட்டி அருளவேண்டும். (6)

नरातङ्कोट्टङ्कः शरणशरणो भ्रान्तिहरणो घनश्यामो वामो व्रजशिशुवयस्योऽर्जुनसखः ।
स्वयंभूर्भूतानां जनक उचिताचारसुखदः शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ ७ ॥
நராதங்கோட்டங்க: ஶரணஶரணோ ப்⁴ராந்திஹரணோ க⁴னஶ்யாமோ வாமோ
வ்ரஜஶிஶுவயஸ்யோ(அ)ர்ஜுனஸக²: .
ஸ்வயம்பூ⁴ர்பூ⁴தானாம்’ ஜனக உசிதாசாரஸுக²த³: ஶரண்யோ லோகேஶோ மம ப⁴வது
க்ரு’ஷ்ணோ(அ)க்ஷிவிஷய: .. 7 ..

नरातङ्कोट्टङ्कः {நராதங்கோட்டங்க:} = மனிதர்களின் பயத்தைப் போக்குகிறவரும்; शरणशरण: {ஶரணஶரண:} = ரக்ஷகர்களுக்கும் ரக்ஷகராயிருப்பவரும்; भ्रान्तिहरण: {ப்⁴ராந்திஹரண:} = மோஹத்தைப் போக்குகின்றவரும்; घनश्याम: {க⁴னஶ்யாம:} = மேகம் போல் கருப்பு நிறமுள்ளவரும்; वाम: {வாம:} = அழகியவரும்; व्रजशिशुवयस्य:

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

{வ்ரஜஶிஶுவயஸ்ய:} = கோகுலத்திலுள்ள சிறுவர்களுக்கு தோழராயும்; अर्जुनसखः {அர்ஜுனஸக²:} = அர்ஜுனனின் நண்பரும்; स्वयंभूः {ஸ்வயம்பூ⁴:} = தானாகவே ஆவிர்பவித்தவரும்; भूतानां {பூ⁴தானாம்} = பிராணிகளுக்கு; जनकः {ஜனக:} = தந்தையும்; उचिताचारसुखदः {உசிதாசாரஸுக²த³:} = அவரவருக்குத் தக்கபடி ஆசரணைகளையும் ஸுகத்தையும் தருபவரும்; शरण्यः {ஶரண்ய:} = ரக்ஷகராயும்; लोकेशः {லோகேஶ:} = எல்லா உலகங்களுக்கும் ஈசுவரனாயும் இருக்கும்; कृष्णः {க்ரு'ஷ்ண:} = கிருஷ்ணன்; मम {மம} = என்னுடைய; अक्षिविषयः {அக்ஷிவிஷய:} = கண்களுக்கு விஷயமாக; भवतु {ப⁴வது} = ஆகட்டும்.

கிருஷ்ணர் மனிதர்களின் எல்லா பயங்களையும் போக்குபவர். உலகில் ரக்ஷகர்களான அரசர் முதலானவர்களுக்கும் ரக்ஷகராக இருப்பவர். மோஹத்தைத் தொலைப்பவர். மேக ச்யாமளர், ஸுந்தரர், கோபச் சிறுவர்களுக்குத் தோழர். பார்த்தனுக்கு நண்பர். பிறப்பு இல்லாதவர், எல்லா பிராணிகளுக்கும் தந்தை, அவரவர் கர்மானுஸாரமாக கார்யங்களைச் செய்வித்து ஸுகத்தைத் தருபவர் லோகநாயகன். இவர் என் கண்முன் தோன்றட்டும். (7)

यदा धर्मग्लानिर्भवति जगतां क्षोभकरणी तदा लोकस्वामी प्रकटितवपुः सेतुध्दजः ।
सतां धाता स्वच्छो निगमगणगीतो व्रजपतिः शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ ८॥

யதா³ த⁴ர்மக்³லாநிர்ப⁴வதி ஜக³தாம்' க்ஷோப⁴கரணீ ததா³ லோகஸ்வாமீ ப்ரகடிதவபு: ஸேதுத்⁴த³ஜ: .
ஸதாம்' தா⁴தா ஸ்வச்சோ² நிக³மக³ணகீ³தோ ப்³ரஜபதி: ஶரண்யோ லோகேஶோ மம ப⁴வது க்ரு'ஷ்ணோ(அ)க்ஷிவிஷய: .. 8..

यदा {யதா³} = எப்பொழுது; जगतां {ஜக³தாம்} = உலகங்களுக்கு; क्षोभकरणी {க்ஷோப⁴கரணீ} = கலக்கத்தைச் செய்கின்ற; धर्मग्लानिः {த⁴ர்மக்³லானி:} = தர்மத்திற்கு வாட்டம்; भवति {ப⁴வதி} = ஏற்படுகிறதோ; तदा {ததா³} = அப்பொழுது; प्रकटितवपुः {ப்ரகடிதவபு:} = சரீரத்தை வெளிக்காட்டுகின்றவரும்; अजः {அஜ:} =

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

(உண்மையில்) பிறப்பற்றவரும்; सेतुधृत् {ஸேதுத்⁴ரு’த்} = உலக நியதிகளைத் தாங்குகின்ற வரும்; लोकस्वामी {லோகஸ்வாமீ} = உலகங்களுக்கு யஜமானனும்; सतां धाता {ஸதாம்’ தா⁴தா} = நல்லோர்களை போஷிக்கின்ற வரும்; स्वच्छः {ஸ்வச்ச²: } = களங்கமற்ற வரும்; निगमगणगी: {நிக³மக³ணகீ³:} = வேத ஸமூஹங்களால் போற்றப்பட்ட வரும்; व्रजपतिः {ப்³ரஜபதி:} = கோகுலத்திற்கு யஜமானனும்; शरण्य: {ஶரண்ய:} = ரக்ஷகராயும்; लोकेश: {லோகேஶ:} = எல்லா உலகங்களுக்கும் ஈசுவரனாயும் இருக்கும்; कृष्ण: {க்ரு’ஷ்ண:} = கிருஷ்ணன்; मम {மம} = என்னுடைய; अक्षिविषयः {அக்ஷிவிஷய:} = கண்களுக்கு விஷயமாக; भवतु {ப⁴வது} = ஆகட்டும்.

தர்மம் குறைந்து அதர்மம் மேலிடும்பொழுது உலக நியதிகளெல்லாம் மாறி உலகமெங்கும் கலக்கம் ஏற்பட்டு ஸாதுக்கள் துன்புறுகின்றனர். அப்பொழுது பகவான் பிறப்பற்றவராயிருந்தாலும் உலகைக் காக்க மாயையால் சரீரம் தாங்கி அவதாரம் எடுத்து அணை தண்ணீரைத் தடுத்து நிறுத்துவதுபோல தன்னால் ஏற்படுத்தப்பட்ட வியவஸ்தைகளை முன்போலவே நிலை நிறுத்தி துஷ்டர்களை சிக்ஷித்து ஸாதுக்களைக் காப்பாற்றி தர்மம் செழித்தோங்கும் படி செய்கிறார். இவர் எல்லா உலகங்களுக்கும் யஜமானன் உலகங்களை அடக்கி ஆள்பவரும் இவரே. இவரையே எல்லா வேதங்களும் போற்றித் துதிக்கின்றன. கோகுலநாதனும் நிர்மலனும் ரக்ஷகனுமான அந்த கிருஷ்ணன் என் கண் முன்னால் தோன்றட்டும். நான் அவரை தர்சித்து அவரது அருளால் ஸத்கதி அடைவேன். (8)

ஸ்ரீ கிருஷ்ணாஷ்டகம் முற்றும்.

For free Copies please mail us. Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்

நாம் நம்முடைய சக்திக்குத் தகுந்த ரீதியிலே தர்மத்தை ஆசரித்து சிரேயஸ்ஸை அடைய வேண்டியது நம்முடைய கர்தவ்யம். நமக்கு அவஸ்யமானது பகவத்பாதாள் ஜனங்களுக்கு ஒரு வார்த்தை சொன்னார். “உன்னுடைய ஜீவிதத்திலே உனக்கு கிடைக்கக்கூடிய சமயத்தை (காலத்தை) வீணாக்கமல் அதை பகவானுடைய நினைவிலே கழிக்க வேண்டும்.” பகவத்பாதாள், “இந்த விஷயத்தை மறக்காதே; உனக்கு கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சமயத்தையும் பகவானுடைய சேவையிலே, பகவானுடைய சிந்தனையிலே, பகவந் நாம ஜபத்திலே உபயோகம் செய். இந்த விஷயத்தை எப்போதும் ஞாபகத்தில்




வைத்துக்கொள். இரண்டாவது, முடிந்த அளவில் பிறருக்கு உதவி செய். யாருக்கும் தொந்தரவு செய்யாதே" என்று சொன்னார்.

சரீரத்தை விட்டுவிட்டுப் போகிறபோது எதை எடுத்துக்கொண்டு போகப் போகிறோம்? ஒன்றும் கிடையாது. வரும்போது தனியாகத்தான் வந்தோம். அதேபோல் தனியாகத்தான் போக போகிறோம். அப்போது நம்மோடு யார் வருவார்? அப்போது நம்மோடு வரப்போவது ஒரே ஒர் ஆசாமி மட்டுமே. அவனுக்குத்தான் "தர்மம்" என்று பெயர். அதுதான் நம் அடுத்த ஜென்மத்தில் சுகத்தைக் கொடுக்கும். அதனால், நாம் அடுத்த ஜென்மத்திலே சுகமாய் இருக்க வேண்டும் என்று நினைத்தால் இப்போது தயங்காமல் தர்மத்தை ஆச்ரயிக்க வேண்டும். தர்மாசரண விஷயத்தில் பகவத்பாதாள், "தர்மத்தை தாராளமாக செய். அதுதான் உனக்கு இரக்ஷை ஆகும். அதுதான் உனக்கு உண்மையான நண்பன். இப்படி உனக்கு கிடைக்கக்கூடிய நேரத்தை பகவானுடைய சேவையில் உபயோகம் செய்து கூடுமான வரையிலும் பிறருக்கு உதவி செய். யாருக்கும் தொந்தரவு செய்யாமல் இரு. இந்த தர்மத்தைக் கடைப்பிடித்துக் கொண்டு ஸத்புருஷர்கள் உடைய சகவாஸத்தில் இரு. அவர்கள்தான் உனக்கு நல்வழியைக் காண்பிப்பார்கள்" என்று சொன்னார்.

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்

"எவ்வளவு வசதிகள் இருந்தாலும் எனக்கு அது தேவையில்லை. ஈச்வர ஸக்ஷாத்காரம் தான் வேண்டும்" என்பது அவர்களின் லட்சியமாக இருந்தது. அதேபோல் அவர்கள் பகவானின் பாதத்தை 24 மணி நேரமும் தியானித்தார்கள். நாமும் தியானம் பண்ணுகிறோம். எதன் மீது ?

24 மணி நேரமும், "பணம் எப்படிச் சேர்ப்பது? அதை எப்படி இரட்டிப்பாக்குவது?" என்று பணத்தைப் பற்றியே நாம் தியானித்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் காரணங்களால்தான் அவர்கள் பெற்ற பலனை நாம் பெறவிடாமல் தடுக்கின்றன.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

நம்முடைய ஸாதனை வழிக்கும் அவர்களது ஸாதனைக்கும் எவ்வளவோ வேறுபாடு! ஆகவே, நாமும் அவர்களுடைய வழியைப் பின்பற்ற வேண்டும். மனதிலேயுள்ள ஆசைகளுக்காக பகவானை வழிபடுவது சரியில்லை. ஆசைகளைப் போக்கிக் கொண்டால்தான் உண்மையான சுகத்தை அடைய முடியும். வருகின்ற ஆசைகளைத் தீர்த்துக்கொள்ள முயறிசிப்பதில் நாம் வெற்றியடைய முடியாது. ஆசைகள் தீராமல் வருத்தம்தான் மிஞ்சும். ஆசை யாருக்கும் இன்பம் சேர்க்காது.

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்

பகவான் கீதையில் தைவீ ஸம்பத் அல்லது தெய்வீகக் குணங்களை பற்றிக் கூறியிருக்கிறார். தயை, சௌசம் முதலியவை தெய்வீகக் குணங்கள், நாம் ஆஸுரி (அசுர) குணங்களைக் கொண்டு இராக்ஷஸர்களாக இருக்கக் கூடாது. தர்ம காரியங்களைச் செய்யும் ஒருவனிடம் நமது சந்தோஷத்தைக் காண்பிக்க வேண்டும். அவருடைய நற் காரியங்களைக் குறை கூறக் கூடாது. “இன்னும் தர்மம் செய்க” என்று அவரை ஊக்குவிக்க வேண்டும். பாபம் செய்பவர்களை நிந்திக்காதீர்கள். அவர்களுக்கு நல்ல உபதேசம் செய்யுங்கள். அப்படியும் திருந்தாவிட்டால் அவனை விட்டுவிடுங்கள், தூஷணம் மட்டும் செய்யாதீர்கள்.

மேலே பகவான் சொன்ன மூன்று குணங்களான, என்றைக்கு எது நமக்குக் கிடைக்கிறதோ அதிலேயே திருப்திகொள்ளுதல், சுகதுக்கங்களில் சம பாவனையோடு இருத்தல் மற்றும் அஸூயைப்படாமலிருத்தல் ஆகியவற்றை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால் நம் ஜீவனம் பவித்ரமாகிவிடும்.

மைத்ரீ, கருணா, முதிதா, உபேக்ஷா ஆகவே சுகமாக இருப்பவன் விஷயத்தில் சிநேகம் (மைத்ரீ), கஷ்டப்படுபவன் விஷயத்தில் கருணை (கருணா), புண்ணியசாலியிடத்து சந்தோஷம் (முதிதா), பாபம் புரிபவன் விஷயத்தில் கண்டு கொள்ளாதிருத்தல் (உபேக்ஷா) ஆகிய இக்குணங்கள் மிக முக்கியமாகும்.

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்

மனிதன் க்ஷேமம் அடைவதற்கு தர்மத்துக்கு உயர்ந்த இடம் உண்டு. சகல தர்மங்களிலும் உத்தமமான தானம் ஒருவருக்கு ஏதோ ஒன்றை மகிழ்ச்சியுடன் கைமாறு எதுவும் எதிர்பார்க்காமல் கொடுப்பது.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸாத்விக, ராஜஸிக, தாமஸிக என்று மூன்று வகையான தானங்களில் தகுதியுள்ள மனிதனுக்கு சரியான சமயத்தில், தகுந்த இடத்தில், கொடுப்பது ஸாத்விக தானம். இஷ்டமில்லாமலும் கைமாறு எதிர்பார்த்தும் கொடுப்பது ராஜஸிக தானம். பண்பற்று தாழ்வுபடுத்தும் முறையில் சமயம் இடம் பெறுபவன் தன்மை எல்லாவற்றையும் லக்ஷியம் செய்யாமல் கொடுப்பது தாமஸிக தானம். ஸாத்விகதானம்தான் கொடுக்கப்பட வேண்டும். மற்ற தானங்கள் நிஷித்தம் (பயனற்றது).

தானங்களில் வித்யா தானம் உண்மையில் பெரியது. குரு வித்யயை கொடுப்பதால் மிகவும் மதிப்புக்குரியவர்.

தானமாக கொடுத்த வஸ்துக்கள் உபயோகத்தில் கரைந்து விடுகின்றன. தானம் அளித்த வித்தை அப்படிப்பட்டதல்ல. அது மேலும் வளரும். ஆதலால் தன்னிடம் எள்ளளவில் உள்ள வித்தையை சுலபமாக மற்றவர்களுக்கு அளிக்கலாம். இதுவும் சத்காரியமாகும்.

ஆதிசங்கரர் போன்ற ஞானிகள் உலகத்துக்கு ஞானத்தை தானம் அளித்து அழியாத கீர்த்தி பெற்றிருக்கிறார்கள். அதே மாதிரி பண்டைய காலத்து அரசர்கள் பக்தர்களுக்கும் ஏழைகளுக்கும் விசேஷ இனாம்களை கொடுத்து புகழ் அடைந்து இருக்கிறார்கள்.

தன் சக்திக்கேற்ப தானம் அளித்து எல்லோரும் கீர்த்தி பெறட்டும்.

பாவத்திலிருந்து நரகமும், ஏழ்மையிலிருந்து பாவமும் தானமின்மையிலிருந்து ஏழ்மையும் உண்டாகின்றன. ஆதலால் எல்லோரும் தானம் கொடுக்க வேண்டும்.

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்